பாம்பன் ஸ்வாமிகள் பாதமலர்கள் போற்றி

# சண்முக கவசம்

ஆன்மிகப் பல்சுவைத் திங்களிதழ்

ஜூன் 2013 ❁ விலை ரூ. 15/-



ஞானமலை செல்வமுருகன் – ஆம்பூர்

# பாலமதி முருகனும், ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் அருள்பாலிக்கும் அற்புதங்களும்

தமிழ்ப் பாட்டி ஔவையார் அவர்கள் முருகப் பெருமான் கேட்ட பல கேள்விகளுக்கு ஒரு நல்ல பதிலைக் கூறி முருகப்பெருமானை ஆச்சரியப்படும்படி செய்தார். அவற்றுள் ஒன்று தான் பின்வருவது:– முருகப் பெருமான் ஔவையாரை நோக்கி "இந்த புவனத்தில் எது பெரியது" என்று கேட்க, அதற்கு ஔவையார் "தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்று கூறினார். ஆக இந்த புவனத்தில் ஒரு மனிதன் நிரந்தரமான பெருமை பெற வேண்டும் என்று சொன்னால் அந்த மனிதன் ஆன்மிகத்தில் தொண்டுகள் பல புரிந்து செயல்பட வேண்டும். தொண்டுகள் என்றால் என்ன? என்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் போது நம் நினைவுக்கு வருவது அமர்நீதி நாயனார் புராணம். தெய்வச் சேக்கிழார் அருளிய பெரியபுராணத்தில்

**"சிந்தை செய்வது சிவன்கழல் அல்லதொன் றில்லார்;**
**அந்திவண்ணர்தம் அடியவர்க்க அமுது செய்வித்துக்**
**கந்தை கீழுடை கோவணம் கருத்தறிந் துதவி**
**வந்த செல்வத்தின் வளத்தினால் வரும்பயன் கொள்வார்"**

என்பதை மட்டும்தான் தொண்டு எனக் கருதவேண்டும். மேலும் திருநாவுக்கரசு நாயனார் அருளிய தேவாரத்தில் கூறிய பாடலை, கண்டிப்பாக ஒவ்வொரு மனிதனும் தெரிந்திருக்க வேண்டும். அது மட்டும் அல்லாமல் அதை கடைப்பிடிக்கவும் வேண்டும்; அது என்ன?

**"அன்னம் பாலிக்குந் தில்லைச் சிற்றம்பலம்**
**பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை**
**என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற**
**இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே"**

இதன் உட்பொருள் சிவபெருமான் அடியார்களுக்கு அன்னம் இடுகின்ற தொண்டினைச் செய்தால் இப்பிறவிப் பெருங்கடலைக் கடப்பது மிகவும் எளிது.

அந்த வகையில் முருகப் பெருமானின் அடியவராகத் திகழ்பவர் **ஸ்ரீ இராமகிருஷ்ண சாது** அவர்கள். இவர்கள் மிக எளிமையான தோற்றத்துடன் ஒரு துறவிக்குரிய இலக்கணத்துடன் தனக்கென்று எதுவும் வைத்துக்கொள்ளாமல் வருகின்ற பொருள்களை முருகனுக்கென்று நினைத்துக் கொண்டு, "குழந்தை வேலாயுதபாணி" எழுந்தருளியிருக்கும் ஒரு முருகன் கோயிலைக் கட்டினார். இந்த இடம் ஒரு தனி மலை குன்றாகவும், காடாகவும் இருந்தது. அதை 20 ஆண்டுகளாக செம்மைப்படுத்தி சட்டப்படியும், ஆகம நெறிப்படியும் முருகனின் அருளினால் உருவாக்கினார். இயற்கை அன்னையின் எழில் கொஞ்சும் அற்புத மலையாகக் காட்சி தரும் **பாலமதி மலை**, கோட்டை மாநகர் எனப் புகழ்பெற்ற வேலூரில் – ஆரணி சாலையில், ஒட்டேரி முத்துரங்கம் அரசினர் கலைக் கல்லூரியைக் கடந்து 8 கி. மீ அழகான கொண்டைஊசி வளைவுகள் கொண்ட மலைப் பாதையின் உச்சியில் அமைந்துள்ளது. அழகிய தோற்றத்துடன் வானளாவிய மஞ்சள் நிற கோபுரம் நம்மைக் கவர்ந்து இழுக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது குழந்தை வேலாயுதபாணி திருக்கோயில். முருகன் கோயில் கட்டுவதற்கு முருகப் பெருமானே குழந்தை வடிவில் வந்து இந்த மலையில் எனக்கு ஒரு கோயிலை கட்டு என காண்பித்தான் என்பது சாது அவர்களின் வாக்கு ஆகும். அவர் உடுப்பது 4முழம் வேட்டியும் ஒரு 2முழம் துண்டு மட்டும்தான். இயற்கையில் ஏற்படும் பனி, கோடைக் காலத்திலும் இவர் உடுப்பது இந்த துணிகள் தான். உண்பதும் இரண்டு வேளை மட்டும், அதுவும் அளவு மிகவும் குறைவு. இந்த மலையில் கோயிலைக் கட்டுவதற்கு இந்த இடத்தை வலம் வந்த நடைப்பாதை எண்ணில் அடங்கா. தன்னுடைய உடல், பொருள், ஏன் ஆவியும் இங்கேதான் அடங்கவேண்டும் என்று முருகனிடம் தினமும் வேண்டுகிறார்.


**சிவத்தமிழ் குகமணி தெ.தனபால்**
ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி ஆசிரியர்
Email : thiruppalli@yahoo.com Cell : 9444958526


குறிஞ்சி நிலத் தெய்வமான முருகப்பெருமான் வேலேந்திய குழந்தையாக காட்சி தருவதால் குழந்தை வேலாயுதபாணி என்னும் பெயரால் இம்மலையில் அருளாட்சி புரிகிறார். மலை உச்சியை அடைந்ததும் அம்மலை மீது ஒரு சிறிய குன்றின் மீது அமைந்துள்ள ஆலயத்திற்குச் செல்ல அழகிய படிக்கட்டுகள்

அமைக்கப்பட்டுள்ளன. ஆலய கருவறைக்குள் நுழையும் முன் கருவறையின் வலப்பக்கம் வலம்புரி விநாயகரும் இடப்பக்கம் விசிறி சுவாமிகள் ஒருகரம் உயர்த்தி ஆசி வழங்கியபடி வரவேற்கிறார்கள். கருவறையினுள் நுழையும் போதே குழந்தை வேலாயுதபாணி எனும் பெயர் கொண்ட முருகப் பெருமானின் தரிசனம் நம்மை பக்திப் பரவசத்தில் ஆழ்த்துகிறது.

இங்கு எழுந்தருளியுள்ள முருகன், சேயோன் ஒருவனையே புகழ்ந்த அருணகிரி நாதர் கூறிய வண்ணம் இருப்பதை கண்டு நாங்கள் மகிழ்ந்தோம்.

“இருவினை யஞ்ச மலவகை மங்க”

“இருள்பிணி மங்க.....” “அதாவது நல்வினை, தீவினை இரண்டுமே அஞ்சி ஒழியவும், மலக் கூட்டங்கள் மங்கி அழியவும், அஞ்ஞானமும், நோய்களும் அகலவும்” என்பதற்கு இணங்க இங்கு எழுந்தருளியுள்ள முருகன் அருள்பாலிக்கிறான்.



அருணகிரிநாதரை தம் மானசீக குருவாக ஏற்றுக் கொண்டு இந்த பாரத புண்ணிய பூமியில் அவதரித்த மகான்கள் பலர் இருந்தாலும், முருகன் ஒருவனையே ஏக தெய்வமாக வழிபட்டு, பெறுவதற்கு அரிய நூல்களான 6666 மகா மந்திரங்களை ஓதி நாம் பயனடைய வேண்டும் என்றும், ஏக தெய்வ வழிபாடு மிகச் சிறந்தது எனவும் கூறிய முனிவர் அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் ஒருவரே ஆவார். இவருடைய சிலை ஒன்று வணங்குபவருக்கு அருள் பாலிக்கும் வண்ணம் அமைக்கப்பெற்றுள்ளது. அதாவது ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சியில் மங்கலம் என்ற தலைப்பில் உள்ள 2ஆம் பாடலில் அடியேன் கூறிய வண்ணம் (கருணை ததும்பும் உன் விழி மலர்ந்தது) அமைந்துள்ளது. அவர் கருணை ததும்பும் விழிகளுடன் அருள்பாலிக்கின்ற வண்ணத்தை வருணிப்பதற்கு வார்த்தைகள் ஏதுமில்லை. இதை வருணிக்க வேண்டுமானால் ஒரு சிறந்த மகா ஞானிகயால் மட்டுமே முடியும். இவருடைய உருவச் சிலைக்கு மிக அருகில் சுவாமிகள் அருளிய சண்முக கவசம், சஸ்திர பந்தம், இரதபந்தம் போன்ற பாடல்கள் மிகப் பெரிய விலை மதிக்கத்தக்க கற்களில் செதுக்கப்பட்டு அங்கே வரும் அடியார்கள் பயன் பெற வேண்டும் என்பதே முக்கிய குறிக்கோளாக எண்ணி அங்கே வைக்கப்பட்டுள்ளதை அறிந்து நாங்கள் மிக ஆச்சரியம் அடைந்தோம். இந்த வருடம், குழந்தை வேலாயுதபாணி ஐம்பொன் சிலை உருவகப்படுத்தி அதை ஒரு சிறிய தேரில் கோயிலின் உட்புறப் பிராகாரத்தில் வலம் வரச்செய்து, 2ஆம் வருட முன் ஏற்பாடான குரு பூசை 19.5.13இல் நடைபெற்றது. (சுவாமிகளின் பிரதி வருட குருபூசை 30.5.13 ஆகும்.) இந்த விழாவிற்கு பல அடியார்கள் வந்து இருந்தாலும், என்னுடைய நினைவுக்கு உள்ளவர் சிலர். அவர்களில் திரு.ம.பாஸ்கரன், குருவராஜா பாளையம் வேலூர் மாவட்டம், சென்னையில் உள்ள திரு. A.K.S. சரவணன் மற்றும் அவருடைய குடும்பத்தார், உறவினர்கள், மற்றும் வேலூர் பாம்பன் சுவாமிகள் அடியார்கள் சேர்ந்து இந்த குரு பூஜையை சிறப்பாகச் செய்தனர். சென்னையிலிருந்து 2பேருந்துகளிலும், கார் மூலமும், பல அடியார்கள் வந்திருந்தனர். சுமாமர் 1000 பேர்களுக்கு காலை மற்றும் பகல் அன்னம்பாலிப்பு மிகச் சிறப்பாக நடைபெற்றது. சொல்லின் செல்வர், வாரியார் சுவாமிகளின் சீடரான சங்கர நாராயணன் அவர்கள், வேள்விகள் செய்து இந்தக் குருபூசையைக் கொண்டாடிய நிகழ்ச்சியைப் பார்ப்பதற்கு அடியேன் மிக்க மகிழ்ச்சியுற்றேன். திரு கலைச் செல்வன், (பாம்பன் சுவாமிகள் மாத இதழ் ஆசிரியர்) பாம்பன் சுவாமிகளைப் பற்றி மிகச் சிறந்த சொற்பொழிவு அருளினார். மற்றும் காஞ்சிபுரம் திரு மாயாமணி அவர்கள் சுவாமியின் கருத்துகளை கூறி எங்களைப் பரவசப் படுத்தினார்கள். ஆனால் அருணகிரி நாதர் கூறிய வண்ணம் “நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே’’ என்ற வாக்கிற்கிணங்க எங்களுக்கு இக் காட்சியைப் பார்க்க இரண்டு கண்கள் போதவில்லை என்பதுதான் அடியேனுடைய மனவருத்தம். மேலும், ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் இயற்றிய சண்முககவசத்தில் “இனமெனத் தொண்ட ரோடு மிணக்கிடுஞ் செட்டி காக்க” என்று 30ஆம் செய்யுளில் கூறியது போல என்னையும் பாலமதி முருகன் அடியார்கள் திருக்கூட்டத்துடன் கலந்து கொள்ளச் செய்ததை நான் பல ஜென்மங்களில் செய்த ஆன்மிகப் பணியின் பலனாகக் கருதுகிறேன். இவற்றுக்கு மணி மகுடமாக திரு.P. ஐயப்பன் அவர்கள் இந்த நிகழ்ச்சியை தொகுத்து அன்றிரவு **YOU TUBE** ல்



http://youtube/f71UGFC3BUU இணையத் தளத்தில் வெளியிட்டார்.

மூலவரை தரிசித்து பின்னர் உற்சவர் சந்நிதியும் கடந்து பிராகாரத்தை வலம் வரும் போது இடப் புறத்தில் வடக்கை நோக்கிய வண்ணம் அருளாசி வழங்கியபடி அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர் ஆகியோரும் வீற்றிருக்கிறார்கள். நவகிரகங்களும், நவசிவலிங்கமும், முருகனின் படைத்தலைவன் வீரபாகு ஆகியோரின் சிலைகளும் உள்ளன. பல்லாயிரம் வருடங்களாக இறைவனை நோக்கி வேண்டிவரும் ஆன்மாக்களை வழிநடத்தியும், சிறப்பானதொரு பாதை வகுத்துக் கொடுத்தது சைவ சித்தாந்தமே. மனிதன் என்ற மேன்மையான பிறவியின் நோக்கம் என்ன என்பதை உணர்த்திய அறுபத்து மூன்று நாயன்மார்களும் அடியார்களுக்குத் தொண்டு புரிந்தார்கள் என்று ஒரே காரணத்திற்காக சிவபெருமான் தனியாகவும், தன்னுடைய தேவியான உமாபார்வதியுடனும், மற்றும் குழந்தையுடனும் அருள்பாலித்தான் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒரு மாபெரும் உண்மைச் சரித்திரம் ஆகும். பதினெண் சித்தர்களும், மகான்களும் தோன்றி இந்த இந்தியத் திருநாட்டில் சைவ சித்தாந்தம் மற்றும் ஜீவகாருண்ய ஒழுக்கத்தையும் உலகிற்கு அறிவித்தார்கள்.

இம்மகான்களில் பெரும் சிறப்பு வாய்ந்த அருணகிரிநாதர், பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாசர், அருட்பெரும்ஜோதி வள்ளல் இராமலிங்க அடிகளார் ஆகியோருக்கு தனி மண்டபங்களில் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவர்களுடன் தெய்வப் புலவர் திருவள்ளுவருக்கும் ஆலயம் அமைந்துள்ளது இந்த ஆலயத்தின் சிறப்பு அம்சமாகும். கோயில்களில் தெய்வப் புலவர் திருவள்ளுவருக்கு தனி ஆலயம் அமைப்பது அரிதாக இருக்கின்ற நம் தமிழகத்தில் இங்கு இப்படி அருளாளர்களும், அடியார்களும், ஆண்டவனும் அமைந்தது உலகத்தில் இந்த இடம்தான் என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். இத்தனை சிறப்புகளையும் தொண்டு என்று நினைத்துக் கொண்டு, இங்கு வரும் அடியார்களுக்கு அன்னம் பாலிப்பது ஸ்ரீ இராமகிருஷ்ண சாதுக்களின் தலையாய கடமையாகக் கொண்டு தனியாக ஓர் உணவுக் கூடமும் அமைத்திருப்பது இவருடைய தவவலிமை என்று கூறினால் மிகையாகாது.

இந்தக் கட்டுரையிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்ன? ஒன்று ஸ்ரீ இராமகிருஷ்ண சாதுவைப் போல தன்னுடைய வாழ்க்கையில் இறைத் தொண்டு புரிவதும், மற்றொன்று மனிதனாகப் பிறந்து மகானாக வாழ்ந்து நம்மிடையே அருள்பாலித்துக் கொண்டிருக்கும் அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் அவர்களை குருவாக ஏற்று அவர்கள் இயற்றிய பாடல்களைப் படித்து அதன்படி தொண்டுகள் பல புரிந்து இந்த புவனத்தில் என்றும் நம் பெயர் நிலைக்குமாறு திகழ்வதும்தான், ஔவைப்பிராட்டியின் வாக்குக்கிணங்க நாம் வாழ்வது ஆகும்.

முருகன் அடியார்கள், ஸ்ரீமத் பாம்பன் சுவாமி களைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும், மற்றும் பாடல்கள் கற்க வேண்டுமென்றால் இணைய தளத்தில் www.pambanswamigal.org OR www.pambanswamigal.net OR www.pambanswamigalenguru.blogspot.in ஆகிய இணைய தளங்களில் சென்று கண்டு களிக்கலாம். இதுவே நான் குருவுக்குச் செய்யும் தொண்டு ஆகும் என எண்ணி மகிழ்கிறேன்.



## ஆன்மிகப் பாதையில் செல்லும் சண்முக கவசம் படிக்கும் நேயர்களுக்கு ஒரு புதிய நற்செய்தி

**சண்முக கவசம் இதழில் வரும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் செய்திகள் தாங்கள் எப்போது வேண்டுமானாலும் படித்துக் கொள்ள இன்றைய விஞ்ஞானத் துறையில் மிகப் பெரிய வசதியை நாம் பெற்றுள்ளதால் இனிமேல் தாங்கள் கீழ்வரும் இணைய தளத்தில் படித்துத் தெரிந்துகொள்ள நமது குழுக்களில் உள்ள ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி மன்றம் இதைச் செய்ய முன் வந்துள்ளது என்பதை நாங்கள் தங்களுக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அந்த இணைய தளத்தின் பெயர் பின்வருமாறு :**

**www.pambanswamigal.net or www.pambanswamigal.org**

மேலும் விவரங்களுக்கு : **Email: thiruppalli@yahoo.com or 94449 58526**